# பரலோக பொக்கிஷங்கள்



*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## வீட்டில் 'உங்கள் ஜீவிய ஒளி' பிரகாசிக்கட்டும்!

உலகத்திலும், பிரதானமாய் உங்கள் வீட்டிலும் "கிறிஸ்துவின் ஒளி" பிரகாசிக்கட்டும்! "ஜீவ வசனமே" அந்த பிரகாசிக்கும் சுடர்! (பிலி.2:14). அதாவது, நாம் வசனத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவித்தால், அதுவே "ஜீவ - வசன" சுடராய் நம்மில் பலன் தரும்! நீங்கள் பெற்ற ஜீவ வசனத்தை, உங்கள் பிள்ளைகளிடமோ, மனைவி அல்லது கணவரிடமோ அல்லது உங்கள் சபையிலோ 'ஒளிவீச' பிரயாசப்பட்டால், அது நிச்சயம் அவர்களிடமும் பிரகாசிக்கும் என்றே இந்த வசனம் வாக்குத்தருகிறது! நானும் வீணாக ஓடாமல் பலன் பெற்றேன்! ஆகவே, என் குடும்பத்தில் ஒளிதர நான் பிரயாசப்பட்டதும் வீணாகவில்லை! என்பதே "ஜீவ - வசன" சுடரின் இரகசியம்! மெய்தான் "நீங்கள் ஜீவ சுடர்" பெறாமல் "பிறரை பிரகாசிக்கச் செய்ய இயலாது".

முந்திய பிலிப்பியர் 2:7,8 வசனங்களில் நம் ஆண்டவரும் அப்படியே முதலாவது "தம்மைத்தாமே" தாழ்த்தினார்! "தாமே, கீழ்ப்படிந்தார்". இப்போது அவர் பெற்ற "ஜீவ ஒளியை" உலகத்திற்கே ஒளி வீசச் செய்யும் பலனைப் பெற்றார்! ஆம், இயேசுவின் பிரயாசம் வீணாகவில்லை! இப்போது நம்முடைய பிரயாசம், நமக்கும் நம் வீட்டிற்கும், சபைக்கும் வீணாவதில்லை! ஆமென். *-tr*

பட்டகம் 39 பிப்ரவரி 2023 பரல்கள் 02



## சத்திய உபதேசமா? திருஷ்டாந்த ஜீவியமா?

இன்றைய கிறிஸ்தவம், தன் நடக்கையில் சொற்பமாகவும், தங்கள் பேச்சில் நீண்டும் இருக்கிறார்கள்! பேச்சில் வலிமையாய் இருக்கிறார்கள், தங்கள் சொந்த கிரியையில் பெலவீனமாயிருக்கிறார்கள். மார்க்க சம்பந்தமான பேச்சுகளைப் பேசிவிட்டு, ஒரு முடிவை எடுக்கிறார்கள்! ஏனெனில், அதுதான் அவர்களுக்கு எளிதாயிருக்கிறது. கிரியைகள் செய்தோ, திருஷ்டாந்தமாய் நிற்பதோ, அதிக விலைக்கிரயம் கொண்டதாயிருக்கிறது. உங்கள் ஜெபத்தில் "ஆண்டவரே, என் சிலுவையை அனுதினமும் சுமந்து வர எனக்கு உதவிசெய்யும்" என ஜெபிப்பது எளிது! ஆனால் நிஜமாகவே சிலுவை எடுத்து, வாழ்வதுதான் கடினம். செயல்பாடு இல்லாத வார்த்தைகளை திரும்பத் திரும்ப பேசுவதில், ஒரு போலியான திருப்தியும் அடைகிறார்கள். இன்று மார்க்க தலைவர்கள் பெரும்பாலோர் உலக - மோக சமரசத்தில், குளிர்ந்த இருதயம் உள்ளவர்களாயிருக்கிறார்கள். அல்லது, பேசி பேசியே தலைகணம் பெற்று வாழ்கிறார்கள்! இதை எப்படி கூறலாம் என்றால் "தகுதியில்லாத ஜீவியம் செய்து கொண்டு..... பிறருக்கு தகுதியான ஜீவியத்தை போதிப்பதாயிருக்கிறது!".

இன்று சபையின் தேவை, உபதேசத்தை நிமிர்த்துவது அல்ல! அப்படியெல்லாம் நிமிர்த்தி நிமிர்த்தி 'பரிசேயத்துவத்தில்' சபை சீரழிந்து உள்ளது. அது அல்ல..... தேவனைக் குறித்த தீராத தாகமும், ஆவிக்குரிய நீரோட்டமும் நிறைந்த சபையே நமது தேவையாயிருக்கிறது! இதுபோன்ற சபைகள், இன்று நம் மத்தியில் அபூர்வமாய் போய்விட்டது! தேவன்தான் நமக்கு உதவி செய்ய வேண்டும்!! *-Ed*

### 2023 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு பிப்ரவரி 10-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி விதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள QR கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘தாழ்ச்சிப் பாத்திரத்தை’ நிறைத்திடும் கர்த்தர்!

*அவர் வந்து நிரப்பும்வரை காத்திருங்கள்*

*இன்று உங்களைச் சூழ ஏராளமான தேவைகள் இருக்கிறதோ? வேதனையும் துன்பமும் நிறைந்து தவிக்கிறீர்களோ? அன்று, “கொஞ்சம் தவிர வேறு ஒன்றும் இல்லை” எனக் கூறியதைக் கேட்ட ஆண்டவர் “அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்” என அழைத்தார் (மத்.14:17,18). எத்தனை குறைச்சல் இருந்தாலும்,* **அந்த குறைச்சலான பாத்திரங்கள்** *தேவனால் தரப்பட்டது என உணர்வடையுங்கள்! நீங்கள் தேவனோடு இசைந்து வாழ்ந்திருந்திருந்தால், இப்போதுள்ள குறைவான பாத்திரத்தையும் பரிசுத்த ஆவியானவர் நிரப்புவார் என்பதை அறிந்திருப்பீர்கள். உங்கள் குறைச்சலான பாத்திரம், நீங்கள் இதுவரை பெற்றிராத ஆசீர்வாதங்களையும் இரட்சிப்பின் அனுபவங்களையும் பெற்றுக்கொள்வதற்கு கிடைத்த சந்தர்ப்பம்! என்பதையும் உணர்ந்திருப்பீர்கள்.*

*ஆகவே உணர்வடையுங்கள்! இந்தக் குறைச்சலான பாத்திரங்களை தேவனிடத்தில் கொண்டு வாருங்கள். அந்த பாத்திரங்களை விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் அவருக்கு முன்பாக ஏந்திப் பிடியுங்கள். அலைமோதும் உங்கள் மனதை அமைதிப்படுத்தி, கர்த்தர் தமது கிரியையை துவங்கும் வரை, அந்தப் பாத்திரத்தை ஏந்தி நில்லுங்கள். கர்த்தர் எதுவும் உங்களுக்கு கட்டளையிடாத பட்சத்தில் ‘யாதொரு கிரியையையும் நீங்களாகவே செய்யாமல்’ பாத்திரத்தை ஏந்தி நில்லுங்கள்!*

**“அவர் வந்து கிரியை செய்யும் வரை” என்ற நல்ல சந்தர்ப்பத்தை நீங்கள் ஆயத்தம் செய்து கொடுத்தால், கர்த்தர் வருகை தந்து கண்டிப்பாய் கிரியை செய்வார்!**

*எந்த உபத்திரவங்கள், குறைச்சல்கள் உங்களை அதைரியப்படுத்தும் அச்சுறுத்தலாய் இருந்ததோ, அவைகள் இப்போது* **தேவனுடைய கிருபையும் அவருடைய மகிமையும்** *உங்கள் ஜீவியமாகிய பாத்திரத்தில் வந்திறங்கும் சந்தர்ப்பங்களாய் மாறிவிட்டன! ஆ இது பேரானந்தம்!*

*இனி என்ன? எத்தனை துன்பங்கள் குறைவுகள் ஏற்பட்டாலும், இனிமுதற்கொண்டு அவைகளை கர்த்தரிடத்தில் மனப்பூர்வமாய் கொண்டு செல்லும் பாக்கியத்தைப் பெற்றுவிட்டோம்!*

*இந்த ஆச்சரியமான வசனத்தைப் பார்த்தீர்களா: "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி.4:19) என்ற வசனமேயாகும். 1) தேவனே நமது மூலதனம். 2) "அவருடைய மகிமையின் ஐசுவரியமே" நாம் பெற்றிடும் பங்கு. 3) இவைகளை "கிறிஸ்து இயேசுவே" நமக்கு கொண்டு வந்து தருபவர்!* **ஆகவே 'அவருடைய ஐசுவரியங்களுக்கு முன்பாகவே' நம்முடைய தேவைகளைக் கொண்டு வரும் பாக்கியம் பெற்றிருக்கிறோம்.** *முன்பு கண்களுக்கு முன்பாக நின்ற குறைச்சல்களை விட, இனி அடையப் போகும் ஐசுவரியங்கள் நம்முடைய இருதயத்தை நிறைத்து விடும்! நிறைவான பொக்கிஷ சாலையை அவர் உங்களுக்கு முன்பாக வைத்தப்படியால், மாசற்ற உங்கள் விசுவாசத்தைக் கொண்டு, அவரது அன்பின் பொக்கிஷத்தால் உங்களை நிறைத்துக்கொள்ளுங்கள்! இனி, சிருஷ்டிப்பின் எந்த நதியையும் நீங்கள் சார்ந்து கொள்ளத் தேவையில்லை! ஏனெனில் "உங்கள் பாத்திரம் நிரம்பி வழிகிறது" என்ற பாக்கியத்தை நீங்கள் கண்டடைந்து விட்டீர்கள்!*

**குறைச்சல் போக்க, பரத்தில் உண்டு!**
**கிருபை ஆண்டவரை விசுவாசியுங்கள்!**
**உங்கள் பாத்திரங்களை நிரப்புவார்!**
**பரத்தின் நதி விசாலம் கொண்டது!**
**சகலமும் அவர் பொக்கிஷத்தில் உண்டு!**
**தமக்குரியவர்களுக்கே தந்து,**
**பாத்திரம் வழிந்தோடச் செய்வார்!**

**குறைச்சல் போக்க, பரத்தில் உண்டு!**
**பிதாவின் கரத்தில் சம்பூர்ணம்!**
**தேவையானதை நன்றியுடன் எடுங்கள்!**
**அவர் வகுத்த பாதையே உங்கள் மகிழ்ச்சி!**
**இருதயம் இயேசுவையே சார்ந்து கொள்ளட்டும்!**
**'திருப்தி' ஆத்துமாவை நிறைப்பதாக!**
**தேவையனைத்திற்கும் 'திருப்தியே' நமது பாங்கு!**

**குறைச்சல் போக்க, பரத்தில் உண்டு!**
**அவரது அன்பை சொல்லட்டுமா?**
**அதின் ஆழம் நீளம் அகலம்**
**அளவிட முடியாத உயர்ந்த அன்பு!**

**நம் உதடுகளாலும் விவரிக்க இயலாது!**
**துதிப்போம்! பிரமிப்போம்!**
**அதுவன்றி, வேறில்லை!**

*"தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?"* (ரோமர் *8:32).*

*- Mrs.சார்லஸ் கவ்மென்*

---

## கர்த்தருக்குள் பிழைத்து வாழ 'தாழ்மையே' நமது சுவாசம்!

*ஆணவத்தின் கொடுமையை அறிந்தவனே கிறிஸ்தவன்*

*கிறிஸ்தவர்களாகிய நாம் மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டிய அபாயம் ஒன்று உண்டு! அது, தன்னைக் குறித்த 'ஆணவம்' என்ற அபாயமேயாகும். அதாவது, பல்வேறு சூழ்நிலைகளில் 'தன்னை ஒரு பொருட்டு' என்று எண்ணுவதே, அந்த ஆணவமாகும். நீங்கள் கிறிஸ்துவின் வழியைப் பின்பற்றும் உத்தம கிறிஸ்தவராயிருந்தால், அவ்வளவு எளிதில் 'ஆணவம்' உங்களை தட்டிப்பறித்துச் செல்ல, கர்த்தர் அனுமதிக்க மாட்டார்!*

*இப்போது உங்களுக்கு ஒரு கேள்வி மனதில் எழும்: "என்னுடைய ஜெயத்தைக் குறித்து அல்லது என் ஆஸ்தி அந்தஸ்தைக் குறித்து நான் ஆணவம் கொண்டவனாயிருந்தால், கர்த்தர் என்ன செய்வார்?" என்ற கேள்வியேயாகும். இந்த கேள்வியை ஒரு வேத போதகரிடம் கேட்டீர்களானால், "நீ தாழ்மைப்படு" என பல குறிப்புகளைக் கூறி பிரசங்கிக்கத் தொடங்குவார். ஆனால், பெருமையை ஒழித்து தாழ்மையை கற்றுக்கொள்ளும்படி, உங்கள் குருவாகிய ஆண்டவர் இயேசுவிடத்தில் சென்றால் "தன் சொந்த மாதிரி ஜீவியத்தைக் காண்பிப்பார்" (மத்.11:29).*

பெருமை நீங்கி தாழ்மைப்பட இயேசுவின் மாதிரியான ஜீவியமே, நம்மை 'அவரது தாழ்மைக்குள்' நடத்த முடியும்! ஒருவேளை, நம் பெருமையை 'கடிந்து கொள்ளவோ அல்லது சிட்சிக்கவோ' செய்வார். அவருடைய கடிந்து கொள்ளுதலில் ஆத்திரமான ஆணவத்திற்கு பதிலாய் 'சாந்தமும் மென்மையுமே' இருக்கும்!

*ஆணவம் அல்லது கர்வம் அல்லது பெருமை, மிக மோசமான பாவமாய் இருக்கிறபடியால், நமக்கு அருளப்பட்ட யாதொரு மேன்மையும், தவறான பாதைக்கு நம்மை நடத்திச் செல்ல தேவன் அனுமதிக்க மாட்டார்.* **இயேசுவின் மாதிரியை நீங்கள் நோக்கிப் பார்த்தால்:** *a) தனக்கென அவர் ஒருபோதும் வேலைக்காரர்களை வைத்துக் கொண்டதில்லை.*

b) *தன்னைச் சுற்றியிருந்த யாதொருவருக்கும் "ஒரு தலைவன் போல் நின்று" ஆட்டிப்படைத்திடவும் மாட்டார்!* c) *அவர் மெய்யாகவே ஆண்டவர்தான்! ஆனால் அவரோ, எந்தவொரு மானிடனிடத்திலும் "சர்வாதிகார போங்கை" காண்பித்தது இல்லை!*

*கர்த்தரிடமிருந்து நான்* **கற்றுக்கொண்ட** *சிறந்த ஆவிக்குரிய புத்திமதிகளையும் உங்களுக்கு கூற விரும்புகிறேன்:*

1. *என்னைக் குறித்து "பொதுமக்கள் என்ன எண்ணுகிறார்கள்?" என அறிய விரும்பும் பெருமையின் சங்கிலியில் சிக்கி, ஒருபோதும் மாட்டிக் கொள்ளாதீர்கள்!*
2. *உயர்ந்த வரங்களைக் குறித்த கிரியைகளுக்கோ, ஒரு சிறந்த செயலை செய்ததற்குரிய கனத்தைப் பெறுவதற்கான எதிர்ப்பார்ப்பையோ உள்ளத்தில் வைத்திருக்காதிருங்கள்!*

*அது ஏனென்றால், ஜனங்களிடத்திலிருந்து வரும்* **'ஆணவத்தை தூண்டும்' புகழ்ச்சி** *வெறும் மாயை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.*

ஆண்டவர் இயேசு ஒருமுறை எருசலேமிற்கு ஒரு கழுதையின் மேல் ஏறி பவனி வந்தபோது, அவரைச் சூழ நின்று கொண்டிருந்த ஜனங்கள், அவருக்கு 'ஓசன்னா!' என பாடி கொண்டாடினார்கள்! பார்த்தீர்களா, நமக்குள் ஆணவத்தின் தீமையை எப்படியாகிலும் கொண்டு வந்து வைத்திட, இந்த உலகத்தின் அதிபதியான பிசாசானவன் எவ்வளவாய் துடித்து நிற்கிறான்!

*ஆனால் ஒரு வார இடைவெளிக்குள் அடுத்த வெள்ளிக்கிழமை, திரள் கூட்ட ஜனத்தோடு சேர்ந்து நின்று "இவனை சிலுவையில் அறையும்!" என கூக்குரலிட்டார்கள். தங்களை அண்டிவந்த, பெருமைக்குரிய போற்றுதலை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மாத்திரமே, தங்களை 'தூஷித்தவர்களின்' தீதுமொழியால் பாதிக்கப்பட மாட்டார்கள்!*

*நீங்கள் தாழ்மையை பெற்று வாழும் மாந்தராயிருந்தால், மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டவர்! தேவனுடைய ராஜ்ஜியத்தில் 'தன்னை ஒரு பொருட்டாக' எண்ணிக்கொள்ளும் யாராயிருந்தாலும் அந்த எண்ணம் அவர்களை விட்டு ஒழியும்வரை, அவர்களுக்குள் ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்படாது! ஆதிமுதற்கொண்டு, இன்று வரை வாழும் பரிசுத்தவான்கள் யாவரும் 'ஆணவம் அல்லது பெருமையின்' கொடுமையை அறிந்து அதற்கு தூர விலகி நின்று வாழ்ந்தார்கள். 'சுவாசத்திற்கு பிராணவாயுவைப்போல' கர்த்தருக்குள் உயிரோட்டமாய் வாழ* **தாழ்மையை சுவாசமாய்** *கொண்டு வாழ்ந்தார்கள்!*

*- A.W.டோசர்*

## தன்னை இழந்து முன் செல்ல, ஆத்துமாவிற்கு துணிவு வேண்டும்!

*இயேசு சென்ற பாதை தொடர, "சிலர் மாத்திரமே" உண்டு*

எவ்வித உபத்திரவங்களும், நம் ஆத்துமத்திற்குத் தேவையானதே யாகும். 1) அவைகள், ஒளியிலிருந்து வரக்கூடும் அல்லது மகிழ்ச்சியான நிலையிலிருக்கும்போதும் வரக்கூடும். 2) அல்லது நம் சுயத்தை அழிப்பதற்கென்று வெளிப்படும் விசுவாச போராட்டத்திலும் வரக்கூடும்! இந்த இரண்டு நிலைகளுக்குள்ளும் பவுல் அப்போஸ்தலன் கடந்து வந்தார். அதை அவர் கூறும்போது "அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, **என் மாம்சத்திலே ஒரு முள்** கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: *என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்"* *(2கொரி.12:7,8,9)*. இவ்வாறு தன் ஆத்துமாவைக் காத்துக்கொண்ட பவுல், தன் மற்றொரு நிலையையும் வெளிப்படையாய் கூறினார்: "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என தன் ஆத்தும நிலையை அறிக்கை செய்தபிறகு, அதற்குரிய பதிலையும் பெற்றார்: இந்த மாபெரும் விடுதலையை "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் தந்தருளியிருக்கிறார்! அவருக்கே ஸ்தோத்திரமுண்டாவதாக" என்றே மகிழ்ச்சியின் செய்தி அறிவித்தார்.

> **உண்மைதான், பரத்தின் தன் சொந்த ஜீவனைக் கொண்டு இயேசு கிறிஸ்து மரணத்தை ஜெயித்தார்! இனி முதற்கொண்டு, மரணத்தின் கூரோ! அல்லது மாம்சத்தின் முள்ளோ! பவுலுக்கு வலி ஏற்படுத்தவோ அல்லது யாதொரு தீங்கு செய்யவோ முடியாது!**

உபத்திரவங்களே முதல் பங்காக தேவன் கிரியை செய்யும் உத்தமம் ஆரம்பிக்கிறது. வெளியில் உள்ள கிரியைகளை சார்ந்து கொள்ளாமல், தேவனுடைய பரிசுத்த நோக்கத்திற்கே ஆத்துமா ஈர்க்கப்படுவதற்கு கிரியை செய்கிறது. அது தேவனுடைய கிரியையாய் இருக்கிறபடியால், "உபத்திரவத்தின் நடுவில் பாய்ந்தோடும் ஜீவநதியைப்போல்" இருக்கிறது. சூழ்நிலைகளின் மத்தியில், நமது ஆத்துமாவை தேவனே நடத்துகிறபடியால், அதை இன்னதென்று புரிந்து முற்றிலும் விளக்கிச் சொல்ல இயலாது!

தேவனுடைய தூய்மையான கிரியை வெளிப்பட, **"தன்னை இழப்பதற்கு" ஆத்துமாவிற்கு தைரியம் வேண்டும்:**

**தன் ஆத்தும வருத்தத்திற்கு 'மதியீனமான இரக்கம் பாராட்டாதிருந்தால்' கர்த்தருடைய தூய்மைப்படுத்தும் செயல் நமக்குள் வேகமாக நடைபெறும்!**

இதுவே நம் ஆவிக்குரிய வேகமான வளர்ச்சியாய் இருக்கிறது. ஆனால், 'மண்ணுக்குரியவைகளை இழப்பதற்கு' வெகு சிலரே ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் 'தன்னை இழக்கும் பாதையில்' சில அடிகள் முன்னேறிச் செல்லும்போது, கடலின் சீற்றங்கள் அதிகரிக்கிறபடியால் சிலர் சோர்வடைந்து விடுகிறார்கள், சிலர் தங்கள் பயணத்தை நிறுத்துவதற்கு நங்கூரம் போட்டு விடுகிறார்கள்..... சிலர் 'பாடுகளின் பயணத்திலிருந்து' விலகி விசால பாதையை தெரிந்துகொள்கிறார்கள். சுய - அன்பு கொண்ட யாவருக்கும் இதுபோன்ற தாறுமாறுகள் நடந்துவிடுகின்றன. உண்மை என்னவென்றால், ஒருவன் தனக்குச் சொந்தமானதை பார்ப்பதற்கு நிறுத்திக்கொண்டு, **கொஞ்சமும் தைரியத்தை இழக்காமல்,** சுய - அன்பிற்கு ஆதரவாக தீனி போடாமல் இருந்தால் மாத்திரமே, நமக்குள் ஆழமாய் வேரூன்றி நிற்கும் சுய - சாம்ராஜ்ஜியத்தை அழித்திட முடியும்! பொதுவாக, ஒரு மனிதனுக்கு மாயமான தோற்றமாயிருப்பதெல்லாம் "ஆவிக்குரிய அனுபவங்களில் முன்னேறியதினிமித்தம், மனுஷர்களால் தான் அறியப்பட வேண்டும்" என்ற விருப்பமேயாகும்.

**அதனிமித்தமாய், ஆவிக்குரிய ரீதியில் தன் சுயத்தை வளர்த்துக் கொண்ட ஒருவர் "தன்னை மாத்திரமே உயர் நிலையில் வைத்துக்கொண்டு, மற்றவர்கள் 'அது யாராயிருந்தாலும்' அவர்கள் குறைவுபட்டவர்கள்" என அறிவிப்பதற்கு தூண்டப்படும் எண்ணமேயாகும்.**

இவ்வாறு ஆவிக்குரிய ரீதியிலும் "சுய - வலிமை கொண்டவர்கள் இருக்கிறார்கள்" என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. இவர்கள் தங்கள் ஆவிக்குரிய தரத்தைவிட குறைவானவர்களிடத்தில் சம்பாஷிக்கப் பிரியப்பட மாட்டார்கள். ஆனால், தன் ஆத்துமாவை மரணத்திற்கு ஊற்றிப் பழகினவர்கள், எவ்வளவு மோசமான பாவிகளிடமும் அமர்ந்து பேசுவார்கள். ஏனெனில், தங்களின் சுயத்தின் வலிமையை அறிந்து இவர்கள் கடந்து வந்தபடியால், பிறருக்கு உதவி செய்வது அவர்களுக்கு இலகுவாயிருக்கிறது!

இவர்களின் ஆத்துமாவை பூரண திருப்திக்குள் நடத்தியது என்ன? அவர்களின் ஆத்துமா தேவன் அழைத்திடும் அழைப்பிற்கு மாத்திரமே செவிகொடுத்து மகிழ பழகியிருக்கிறது என்ற இரகசியமேயாகும்!

**எவ்வளவுதான் வெளியில் நிகழ்வுகள் ஏற்பட்டாலும், தங்களை சந்தித்த எதிர்ப்புகளிலும் இழிவுப்படுத்தப்பட்டதிலும், 'கர்த்தரால் அருளப்பட்டது' என்றே எண்ணி முன்செல்வார்கள்!**

*தங்கள் சொந்த சுய - விருப்பத்தின் சிங்காசனத்தின் குரலுக்கு தொடர்ச்சியாய் மறுப்பு கூறிவிடுவார்கள்.*

*இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையிலிருந்துதான் 'தெய்வ அன்பின் வெள்ளம்' ஜீவநதியாய் புறப்பட்டுச் செல்லுகிறது. ஆனால், எத்தனை பேர் இந்த தெய்வீக நிலைக்கு கடந்து வந்திருக்கிறார்கள்? எனக்குத் தெரிந்த வரை "**வெகு கொஞ்சம் பேர்களே**" என்பதை அறிவேன். நான் கண்டு அனுபவித்த இந்த சம்பூரணத்தை இன்னமும் எவ்வளவு தெளிவாய் கூற முடியும்? என்றே அங்கலாய்கிறேன். ஆகிலும், நான் பெற்ற ஜீவியத்தின் தெய்வீக பெலத்தோடு, என்னால் முடிந்த வார்த்தைகள் மூலமாய், நான் அனுபவித்த பாக்கியத்தை மற்றவர்களுக்கு அறிவிக்கிறேன்!*

*- மேடம் குயான்*

---

## ஆவிக்குரிய 'இருள் போக்கிட' தீவிரம் கொள்வோம்!

*இக்கால நிலைமை அறிந்து வாழ்பவன், கிறிஸ்தவன்*

*சபைகள் யாதொரு குழப்பமின்றி வேதத்திலும் கிறிஸ்துவிலும் பூரண நம்பிக்கை வைத்திருந்த காலத்தில், கிறிஸ்துவின் ஜீவியத்தை மென்மேலும் எழுதுவதே போதுமானதாயிருந்தது! ஆனால், தற்காலமோ அப்படிப்பட்டதன்று! வேதவிரோதிகள் புறம்பேயிருந்து எதிர்த்த காலம்போக, சபைக்குள்ளிருக்கும் வேதபண்டிதர்களே* (Bible Teachers) *வேதத்தையும் கிறிஸ்துவையும் புரட்டத் துணிந்துள்ளார்கள். இந்த தாறுமாறு கொள்கைகள், தேசமெங்கும் பரவியிருக்கின்றன. வேதசாஸ்திரப் பாடசாலைகளிலும் நுழைந்துள்ளன. போதகர்களும், வேதசாஸ்திர மாணாக்கரும் இதற்கு துணைபோகின்றனர்!*

**வேத சாஸ்திரிகள் தடம் புரண்டு செல்வதை எதிர்நிற்கக்கூடாமல், சாதாரண கிறிஸ்தவர்கள் தத்தளிக்கின்றனர். ஆதிப்பிதாக்களின் விசுவாசம், இன்றைய கல்விமான்களுக்கு அறிவீனமாகத் தோன்றுகிறது. சகலமும் வேத அறிவின் ஆராய்ச்சியாயிருக்கிறதேயன்றி, விசுவாசத்துக்கு இடமில்லை!**

*தேவ வசனத்துக்கு ஒரு காலத்திலிருந்த மதிப்பும் பக்தியும் குறைந்துள்ளது. காரியங்கள் இவ்வாறிருக்க, சபைகளில் 'கிறிஸ்துவின் ஜீவனில்லாத' நிலைமையைக் குறித்து நாம் ஆச்சரியப்படுவானேன்?*

*இப்படிப்பட்ட கொடியகாலத்தில், நாம் கிறிஸ்துவின் மாசில்லாத*

ஜீவியத்தை எழுதும்போது **தப்பான உபதேசங்களைக் குறித்து கண்டும் காணாதவர்களைப்போல் இருப்பது எப்படி?** கிறிஸ்தவர்களுடைய மனது பலவாறாய்த் தத்தளிக்கும் இக்காலத்தில், பொதுவாக எழுதப்படும் பரிசுத்த ஜீவியத்தைக்கூட அவர்கள் 'பிரியத்துடன்' வாசிக்கமாட்டார்கள். ஆகையால், சாதாரண காலத்தில் எழுதப்பட்ட ஜீவியத்துக்கும், இக்காலத்தில் எழுதப்படும் சத்தியங்களுக்கும் **ஆணித்தரமான வித்தியாசம்** வேண்டும்!

மேலும், இது கல்வி அறிவும் சாஸ்திர ஆராய்ச்சியும் பெருகி வருகிற காலம். ஆகவே விசுவாசத்தை தள்ளி வைத்துவிட்டு, இது எப்படியாகும் அது எப்படியாகும் என்று வேத அறிவாளிகள் கேட்கின்ற காலமாகிவிட்டது! ஆகவேதான் 'ஜீவன் குறைந்துவரும்' இக்காலத்தில், பிரசங்கங்களில் அநேகருக்கு விருப்பம் குறைந்து வருகிறது! தேவனுடைய சத்தியங்கள் இருதயத்தில் பதியப்பட வேண்டுமானால், காலத்தின் மாறுதலை கண்டிப்பதற்கு கவனம் எடுப்பதும் அவசியம்!

**கிறிஸ்துவும் அவரது சத்தியங்களும் ஒருக்காலும் மாறுவதில்லை. ஆகிலும், ஜனங்களுடைய மனநிலை கால வித்தியாசத்தால் மாறுதலடைந்திருப்பதால், பழைய சுவிசேஷத்தையே மீண்டுமாய் வலியுறுத்தி, புதிய முறையிலும் புதிய வல்லமையிலும் பிரசங்கிக்க வேண்டிய காலம் இது!**

மார்க்க விஷயத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயம் எவ்வளவு பேதப்பட்டிருந்தாலும், அவர்களுடைய மனதிலுள்ள சந்தேகம் நீங்கி, நம்பிக்கை உண்டாகும்படி சத்தியத்தை நியாயத்துடன் எடுத்துக்கூறவேண்டும்! கர்த்தருடைய வசனங்கள் நீதியும் நியாயமுமானவைகள்! உலகத்தில் சாஸ்திரமும் கல்வியும் எவ்வளவு தரம் குறைந்தாலும், **தேவ வசனத்தின் விசுவாச வெற்றி குறைவதில்லை.** எத்தனை ஆண்டுகளாக இயேசு கிறிஸ்துவை நாம் நெருங்கி ஜீவித்திருந்தாலும் "இன்னமும் அவரை அறிய வேண்டும்" என்ற வாஞ்சையே, இன்றைய நமது தேவை!

தற்காலத்து உபதேசக்காரர்கள், பிரசங்கிக்கிற வேறே சுவிசேஷத்தையும் வேறே கிறிஸ்துவையும், கர்த்தருடையவர்கள் அறிந்திருப்பார்கள்! கிறிஸ்துவை விட்டு விலகாதவர்களாய் நாம் இருந்தால், வேறே சுவிசேஷத்துக்கும் வேறே கிறிஸ்துவுக்கும் இடமேது? கிறிஸ்துவை மனுஷனாக மாத்திரம் போதிக்கிறவர்கள் முக்கியமான வேதவாக்கியங்களை அகற்றி விடுவதற்கும், அல்லது தங்கள் உபதேச கொள்கைக்கு இசைவாக அவ்வாக்கியங்களை மாற்றிக்கொள்ளவும்

*துணிந்தது எப்படி? கிறிஸ்துவைப் பற்றிய அறிவு இல்லாததும்,* **வேதமே நமக்கு ஆதாரம்** *என நாம் காக்கத் தவறியதாலும் ஏற்பட்ட பரிதாபம் அல்லவா? வேதாகமம் தேவனால் அருளப்பட்டது! அதில் 66 புஸ்தகங்கள் உண்டு. எழுதினவர்கள் 44 பேர். எழுதப்பட்ட காலம் 1500 வருஷங்களுக்குமேல்!*

*அவர்கள் ஒரே காலத்தில், ஒரே தேசத்தில், ஒரே இடத்தில் கூடியிருந்து எழுதினவர்கள் அல்ல. அவர்கள் ஒருவரையொருவர் அறியாதிருந்தார்கள். அவர்கள் இருந்த இடங்கள் வேறே! எழுதின காலங்கள் வேறே! எழுதின நடைகள் வேறே! எழுதின சந்தர்ப்பங்கள் வேறே! எழுதின விஷயங்கள் வேறே! எழுதின பாஷைகள் வேறே! எழுதினவர்களின் அந்தஸ்து வேறே! இவ்வாறு 1500 வருஷங்களாகப் பற்பல மனுஷரால், பற்பல நிலைமையில், பற்பல காலங்களில் எழுதப்பட்ட, பற்பல புஸ்தகங்களில் ஒன்றுக்கொன்று விரோதமும் வித்தியாசமுமல்லவோ காணப்பட வேண்டியது? அப்படியிருக்க, வேதாகமத்தில் நாம் காண்கிற அதிசயம், அதன் பூரண ஒற்றுமையே!*

*வேதாகமத்தை முதலிலிருந்து கடைசிவரை வாசிக்கும்போது ஒரு விதை முளைத்து, செடிவளர்ந்து, இலைகள் நிறைந்து, பூத்துக்காய்ப்பதுபோல, ஆதியாகமாகிய வித்திலிருந்து தேவசித்தம் வெளிப்பட்டு, வளர்ந்து, பெருகி.... முடிவாக, வெளிப்படுத்தின விசேஷத்தில் கனிகள் நிறைந்திருக்கக் காண்கிறோம்!*

*இந்த ஒற்றுமைக்குக் காரணம் என்ன? ஒரு சிற்பாசாரி பற்பல வேலைக்காரரைக்கொண்டு, நீண்டகாலமாக வேலையை நடத்தி, தான் தீர்மானித்த மாதிரியின் பிரகாரம் ஒரு சிறந்த மாளிகையைக் கட்டி முடிப்பதுபோல, வேதாகமத்தைக் கட்டிமுடித்த சிற்பாசாரி சர்வத்துக்கும் மேலானவரல்லவோ, நம் தேவன்! இத்தனை மகத்துவத்திற்கும் உடன் சுதந்திரராய் இருக்கும் நாம், 'மாசு மேகம் போக்கி' ஒளிவீசி வாழ்ந்திட தீவிரம் கொள்ளக்கடவோம்!*

*- பரமானந்தம் ஐயர்*

---

## நம் சிநேக உறவை நாடும் கர்த்தர்!

*கிறிஸ்தவன் தெய்வ சிநேகத்தில் வளருவான்*

**பொ**துவாக, காதலர்கள் தனிமையாய் இருப்பதற்கே விரும்புவார்கள். தங்களைச் சுற்றி, யாரும் இருந்திட விரும்ப மாட்டார்கள். நம் இந்திய கலாச்சாரம், புதிதான திருமணத் தம்பதிகளை தனிமையாக இருக்க விடுவதில்லை. ஏராளமான நண்பர், உறவினர்களைச் சந்திக்கவும், மாலை விருந்து அழைப்பிற்கு

செல்வதுமே, புதிய தம்பதிகளுக்கு நிகழும் வழக்கமாயிருக்கிறது. உன்னதப்பாட்டில் வரும் சூலமித்தியாள், தன் நேசரிடம் கூறிய வார்த்தைகளை நாம் கவனிப்பது நல்லது: "வாரும் என் நேசரே! வயல்வெளியில் போய், கிராமங்களில் தங்குவோம். அதிகாலையிலே திராட்சத்தோட்டங்களுக்குப் போவோம்; திராட்சக் கொடி துளிர்த்து அதின் பூ மலர்ந்ததோ? என்றும், மாதளங்செடிகள் பூப்பூத்ததோ? என்றும் பார்ப்போம்; அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன்" (உன்.7:11,12) என அழைத்தாள். "நம் இரட்சகரோடு வைத்துக்கொள்ளும் நம் ஆத்துமாவின் உறவை விவரிப்பதற்கு" இந்த வசனங்களை விட மேன்மையான வசனங்கள் வேதாகமத்தில் வேறில்லை. கிறிஸ்துவே நம் ஆத்தும மணவாளன்! நாம் அவருடைய மணவாளியாக நிச்சயிக்கப்பட்டுள்ளோம்! திருமணம் இனிமேல் தான் நடக்கப்போகிறது! இதற்கு இடைப்பட்ட காலமே "நேசமான காதல் உறவின்" இன்றுள்ள காலமாகும்!

**உன்னதப்பாட்டு புத்தகம் சுட்டிக்காட்டும் மணவாளன், மணவாளி என்ற உறவின் ஆதாரத்திலேயே, பிதாவாகிய தேவனோடு அவருடைய பிள்ளைகளாகிய நாம் நெருங்கிய உறவில் வாழ வேண்டும் என்பதை அறிந்துகொள்கிறோம்!**

நாம் கிறிஸ்துவை விசுவாசித்த போது, தேவனுடைய குடும்பத்தில் பிறந்திருக்கிறோம் (யோவான் 1:12). இது, 'பொதுவான' உறவேயாகும். தேவனோ, நம்மோடு 'நெருங்கிய' ஐக்கியம் வைத்துக்கொள்ளவே விரும்புகிறார். அதைவிடுத்து, உலகத்தோடு நாம் சல்லாபமாய் வாழ்ந்திட தேவன் விரும்புவதில்லை. 2கொரிந்தியர் 6:17,18 வசனங்களைப் பாருங்கள்: "ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்! அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, **உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்,** நீங்கள் எனக்கு குமாரரும் குமாரத்திகளுமாய் இருப்பீர்கள் என்று **சர்வ வல்லமையுள்ள கர்த்தர்** சொல்லுகிறார்" என வாசிக்கிறோம். அவர் சர்வ வல்லமையுள்ள கர்த்தராயிருந்தும் "பிதா - பிள்ளைகள்" என்ற உறவை எவ்வளவாய் வாஞ்சிக்கிறார் என்பதைப் பாருங்கள். இதற்கு மாறாக, நாம் உலகத்தோடு சிநேகம் கொண்டிருந்தால், தேவன் அதை பொறுத்துக்கொள்ள மாட்டார்! எனக்கூறும் யாக்கோபு 4:4-ம் வசனத்தையும் பாருங்கள்.

மெய்யாகவே, நான் மேலே குறிப்பிட்ட நெருங்கிய சிநேகத்தையே, இயேசு தன் பிதாவின் மீது வைத்திருந்தார். கீழே குறிப்பிட்ட வசனங்களை கவனித்துப் பார்த்தால் இந்த உண்மையை

*விளங்கிக்கொள்வீர்கள். யோவான் ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்டு மரித்தவுடன், அந்த செய்தியை இயேசுவிடம் சீஷர்கள் அறிவித்தார்கள். அதை இயேசு கேட்டவுடன் "அவ்விடம் விட்டு படவில் ஏறி, வனாந்திரமான ஓர் இடத்திற்குத்* **தனியே போனார்**" *(மத்.14:12,13). மற்றொரு சமயம், சீமோன் பேதுருவின் வீட்டில் இயேசு இருந்தபோது, பட்டணத்தார் எல்லாரும் பேதுருவின் வீட்டு வாசலுக்கு முன்பாக கூடிவந்தார்கள். அப்போது பலவிதமான வியாதிகளினால் வியாதிப்பட்ட அனைவரையும் இயேசு சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்! அடுத்த நாள், இயேசு என்ன செய்தார் தெரியுமா? "அவர் அதிகாலையில் இருட்டோடு எழுந்து புறப்பட்டு, வனாந்திரமான* **ஓர் இடத்திற்குப் போய் (A Solitary place)** *அங்கே ஜெபம் பண்ணினார் (மாற்கு 1:32-35). அதாவது சுமார் காலை 5 - மணிக்கு முன்பே இயேசு எழும்பி தன் பிதாவோடு தனித்திருப்பதற்கு தீராத வாஞ்சை கொண்டு அந்த வனாந்திர இடத்திற்குச் சென்றார்!*

**இன்று அநேக கிறிஸ்தவர்களிடத்தில் காணப்படும் பின்மாற்றம் என்ன?: "என்னுடைய வேலையையும், என்னுடைய தினசரி கடமைகளையும் கவனிப்பதற்கே எனக்கு நேரம் போதவில்லை. ஆகவேதான், தேவனோடு தனித்திருப்பதற்கு எனக்கு நேரம் இல்லை!" என்றல்லவா கூறுகிறார்கள்!**

*இயேசுவின் ஊழியம் வேகமாய் பெருகிய அந்தக் காலத்திலும் "அதை அவர் சுட்டிக்காட்டி" தன் பிதாவோடு தனிமையாய் இருப்பதற்கு தடையாய் கூறியதில்லை!*

*லூக்கா 5:15,16-ம் வசனங்களில் "திரளான ஜனங்கள் அவருடைய உபதேசத்தை கேட்பதற்கும், அவராலே தங்கள் பிணிகள் சுகமடைவதற்கும் கூடி வந்தார்கள்! ஆனால் அவரோ,* **வனாந்தரத்தில் தனித்துப்போய்,** *ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்!" என்றே வாசிக்கிறோம். அதிகமான ஜனங்களென்றோ அல்லது அதிகமான ஊழியங்களென்றோ பெருகும்போது, தேவனோடு தனித்திருப் பதற்குரிய நேரமும் பெருகவேண்டும்! மற்றொருசமயம், அப்போஸ்தலர் திரும்பி, இயேசுவிடத்தில் வந்தபோது, தங்கள் ஊழியத்தில் நிகழ்ந்த மகத்துவமான காரியங்களை எடுத்துக் கூறினார்கள்! அவ்வேளையில் இயேசு கூறியது என்ன தெரியுமா? "வாருங்கள்,* **வனாந்திரமான ஓர் இடத்தில் தனித்து** *சற்றே இளைப்பாறும்படி போவோம்" என்றே கூறினார்! (மாற்கு 6:30,31). இன்றோ சுகமளிக்கும் கூட்டங்களை நடத்தும் பிரபல்யமான அநேக சுவிசேஷகர்கள், தங்களின் "நேரமில்லை" என்ற அவர்களின் நிலையிலிருந்து மீண்டு வர, சிறந்த பாடங்களை இந்த வசனங்களில் காண்கிறோம்.*

தேவனுக்கு செலவழிக்கும் நேரத்தை இவர்கள் எவ்வளவு குறைக்கிறார்களோ, அந்த அளவிற்கு அவர்களின் கூர்மையான கவனம் சிதைந்து, வஞ்சிக்கப்படுவதற்கு தங்கள் இருதய கதவை திறந்து வைத்து விடுகிறார்கள்! நாம் தேவனுக்கு அதிகமாய் ஊழியம் செய்திட வேண்டுமென்றால், நாம் தேவனோடு அதிகமாய் இருக்க வேண்டியது அவசியமாகும்!

*இயேசு அடிக்கடி கூறிய "**நான் தனித்திருக்கவில்லை**" என்ற அவரது வார்த்தைகளை கவனித்திருக்கிறீர்களா? (யோவான் 8:16,29; 16:32). இந்த அருமையான வாசகம், இயேசு தன் பிதாவோடு கொண்டிருந்த நித்திய உறவின் தொடர்ச்சியாகவேயிருக்கிறது! பிதாவோடு நெருங்கிய உறவின் சித்திரத்தை நீதிமொழிகள் 8:30,31 வசனங்கள் காட்டுகின்றன: "நான் **அவர் அருகே** செல்லப்பிள்ளையாய் இருந்தேன்! நித்தம் **அவருடைய மனமகிழ்ச்சியாய்** இருந்தேன்! எப்பொழுதும் **அவர் சமூகத்தில்** களிகூர்ந்தேன்! **அவருடைய பூவுலகத்தில்** சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந்தேன்". இந்த அருமையான உறவைத்தான் யோவான் 1:1-3 வசனங்களில்: "ஆதியிலே வார்த்தை இருந்தது! அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது! அந்த வார்த்தை தேவனாயிருந்தது....." என, நாம் காண்கிறோம்.*

*ஆகவே, மறுபடியும் பிறந்தவுடன், நீங்கள் தேவனிடத்தில் பெற்றுக்கொண்ட "பொதுவான ஐக்கியத்தில்" திருப்தி அடைந்து விடாதீர்கள். தொடர்ந்து, ஓர் நெருக்கமான உறவில் முன்னேறும் போதுதான் "**ஐக்கியத்திலிருந்து தெய்வ சிநேக நட்பிற்குள்**" பிரவேசிக்கிறோம். இதுவே தேவனுடைய வாஞ்சையாயிருக்கிறது.... அது இப்போது, நம்முடைய வாஞ்சையாய் மாற வேண்டும்!*

*இதை இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு சுட்டிக்காட்டி: "இனி நான் உங்களை ஊழியக்காரன் என்று சொல்கிறதில்லை. ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறிய மாட்டான்! **நான் உங்களை சிநேகிதர் என்றேன்!** ஏனெனில், என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" என யோவான்15:15-ல் கூறினார். நம்மை எப்படியெல்லாம் தேவனோடு மிக நேர்த்தியாய் இயேசு இணைக்கிறார்! ஆகவே, "தேவனாகிய நம் பிதா" என்பதை மாத்திரம் காண்பித்திட இயேசு வராமல்.... தேவனுடைய நட்பையும் நமக்கு அவர் காண்பிப்பது, எவ்வளவு பெரிய சிலாக்கியம்!*

*யாக்கோபு தன் நிருபத்தில் "**ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன்** என அறியப்பட்டிருந்தான்" (யாக்.2:23) என கூறியதைப் பாருங்கள். இவ்வாறு யாக்கோபு எழுதியதற்குரிய ஆதாரம் என்னவென்றால்:*

*“நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?” என ஆதியாகமம் 18:17-ல் தேவன் கூறிய வசனமேயாகும். ஆகவே, தேவன் தனக்குரியதை பகிர்ந்து தருவதில், அவரோடு கொண்ட நெருங்கிய உறவு வளர்கிறது.*

*இதே சிநேகித உறவைத்தான் இயேசு தன் சீஷர்களுக்கு யோவான் 15:17-ம் வசனத்தில் எடுத்துக்கூறினார்! இதே போன்ற உறவுதான் மோசேயிடத்திலும் மெய்யாகவேயிருந்தது: “ஒருவன் தன் சிநேகிதரோடே பேசுகிறது போல கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் பேசினார்” என யாத்திராகமம் 33:11-ம் வசனத்தில் காண்கிறோம்.*

**இதுபோன்ற நெருங்கிய உறவை, ஒருவன் தேவனோடு தனிமையில் நேரம் செலவழிக்காமல், சாத்தியமேயில்லை! இந்த உறவின் அடிப்படையில்: “நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, ஜெபம் பண்ணு” என, இயேசு கூறியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.**

*ஏராளமான ஆவிக்குரிய சிட்சையும் சீர்த்திருத்தலும் இந்த அந்தரங்கத்திலும், தனிமையிலுமே நடைபெறுகிறது! “பலரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற விளம்பர வெளிச்சம்” அந்த பகலுக்கு ஏற்பட்ட சாபமாகும்!*

*தன் சீஷர்களை ஏன் இயேசு தெரிந்து கொண்டார்? அதற்குரிய இரண்டு முக்கியமான நோக்கங்களை மாற்கு 3:14-ம் வசனத்தில் காண்கிறோம்: “அவர் பன்னிரண்டு பேரை தெரிந்துகொண்டு,* **அவர்கள் தம்மோடு கூட இருக்கவும்,** *பிரசங்கம் பண்ணும்படியாக.... வியாதிகளை குணமாக்கிட.... பிசாசுகளை துரத்திட ஏற்படுத்தினார்!” என்பதேயாகும். அவர்களை தெரிந்துகொண்டதில் இயேசுவின் பிரதான நோக்கமே “அவர்கள் தம்மோடு கூட இருக்க வேண்டும்!” என்பதேயாகும்.* **இதுவே மிகப்பெரிய ஆச்சரியம்: ஐக்கியம்! நட்பு! தோழமை! நெருங்கிய உறவு!**

*உண்மைதான், ஓர் மிகுந்த பலன் தரும் ஊழியம், தேவனோடு கொண்ட நெருங்கிய உறவின் ஜீவியத்திலிருந்தே பாய்ந்தோடுகிறது. இவ்வாறாகவே நாம் “தேவனுக்கு உடன் வேலையாட்களாய் மாறுகிறோம்” (1கொரி.3:9). தேவன் நம்மை* **வெற்றியுள்ள ஊழியத்திற்கு அழைக்காமல், பலன் தரும் ஊழியத்திற்கே** *நம்மை அழைத்திருக்கிறார். மிகுந்த பலனான கனிதரும் ஊழியம், நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்தால் மாத்திரமே சாத்தியமாகும் (யோவான் 15:4,5). ஒருவன் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பது “அமைதி தியானத்தில்*

*விளைந்திடும்'' கிரியையாகும். 'தேவன்' என்று அழைக்கப்படும் 'என்ஜின் கருவியில்' நாம் ஓர் உபகரணம் அல்ல! நாமோ, திராட்சை செடி என அழைக்கப்படும் இயேசுவோடு இணைந்திருக்கும் கொடிகள்! இயற்கைக்கு அப்பாற்பட்ட, நெருங்கிய இயற்கையான உறவு! ஆமென்.*

*- R.ஸ்டான்லி BYM*

---

## கர்த்தருடைய ஊழியத்திற்கு 'அர்ப்பணமே' பிரதானம்!

*'இருப்பதை கொடுப்பதன்றி'' வேறெதை கேட்கிறார்?*

**ஞா**யிறு பள்ளியில் D.L.மூடி காட்டிய சிரத்தையான உத்தமமே, திரளான மக்களை கிறிஸ்துவிடம் சேர்க்கும் **மூடிப் பிரசங்கியராய்** மாற்றியது!

மூடி தமது ஞாயிறு வேதாகம பள்ளிக்கு, மாணவ மாணவிகளைக் கொண்டு வந்து, அவர்களை ஆண்டவரின் பிள்ளைகளாக்க பேரார்வத் துடன் தெருக்களில் அங்கும் இங்கும் அலைந்து திரிவார்! ஒரு உதாரணம் பாருங்கள்: சிக்காக்கோ நகரில், ஒரு சிறு பெண், மூடியின் வேதாகம பள்ளிக்கு வருவதாகவும் அதற்கு தனது தாயாரின் அனுமதியை மூடி பெற்றுத்தர வேண்டும் என்றும், அவரைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். வீட்டுக்கு வெளியே தெருவின் ஒரு மூலையில் அவரை சற்று நேரம் காத்திருக்கும்படியாக கூறிவிட்டு சென்றவள், வீட்டைவிட்டு வெளியே வரவே இல்லை! ஏழை மனிதன் 3 மணி நேரம் பொறுமையோடு காத்திருந்தும், அவள் வந்தபாடில்லை! அந்த சிறுமியின் வீடு எது? என்றும் அவர் அடையாளம் காண முடியவில்லை. மூடி துக்கத்துடன் போய் விட்டார்!

கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் அந்த சிறுமியை அவர் தெருவிலே பார்த்தார். அவரைப் பார்த்ததும், அவள் ஓட்டம் பிடித்தாள்! அவரும் அவளைப் பின் தொடர்ந்து ஓடினார். அங்கே ஒரு குதிரை வண்டி நிறுத்தப்பட்டிருந்தது. அதைச் சுற்றி சுற்றி அங்குமிங்குமாக அவள் மூடியை ஏமாற்றுக் காட்டி ஓடிக் கொண்டிருந்தாள். அதற்கும் மூடி மசியவில்லை. இப்பொழுது அவள் ஒரு சாராய கடைக்குள் சென்று மாடிப் படிகளில் ஏறி ஓடிவிட்டாள். மூடியும் படிக்கட்டுகள் வழியாக ஏறி, மாடியில் பார்த்தபோது சிறுமியை காணவில்லை. அங்கிருந்த கட்டிலின் கீழே பார்த்தபோது அவள் அங்கு ஒளிந்துக் கொண்டிருந்தாள்.

மூடி வேர்த்து விறுவிறுக்க மூச்சு வாங்கிய நிலையில், கட்டிலின்

*கீழாக ஊர்ந்து சென்று அவளது காலைப்பிடித்து வெளியே இழுத்தார். அவளை எப்படியோ அன்பாகப் பேசி, தனது வேதாகம பள்ளிக்கு ஒழுங்காகவரச்செய்துவிட்டார். மேற்கண்ட அசாதரணமான நிகழ்வைக் குறித்து, அவரது நண்பர் பேசும்போது "மூடி பிரசங்கியார் ஒரே ஒரு சிறுமியை அவளது கட்டிலின் கீழிருந்து இழுக்கவில்லை.....* **அந்த சிறுமியின் முழுக்குடும்பத்தையே** *பரலோகத்துக்கு இழுத்துக்கொண்டு வந்து விட்டார்" என்று மகிழ்வுடன் குறிப்பிட்டார்!*

**இந்த மூடியை "என்சைக்ளோ பீடியா" என்ற உலக ஆராய்ச்சி நூல் விவரித்துக் கூறும்போது "இரண்டு கோடி மக்களை" நரகத்தின் ஜனத்தொகையை காலியாக்கி மீட்டெடுத்தவர் எனக் குறிப்பிட்டுள்ளது!**

*இந்த மூடி, நம் யாவருக்கும் ஓர் சவாலாய் இருக்கிறார். நாம் வாழும் கொடிய இக்காலத்தில்,* **கர்த்தருக்கென அர்ப்பண ஊழியம்** *செய்வோர் அநேகர் இல்லை! "என்னால் இயலாது" என்பதே இவர்களின் கூற்று. உங்களிடம் இருப்பது, எவ்வளவு குறைவாய் இருந்தாலும், அதைக் கொண்டு இயேசு உங்களைப் பயன்படுத்த முடியும்!*

வாலிப பிராயத்தில் நவ-இங்கிலாந்து தேசத்தில் D.L.மூடியை தேவன் தொட்டார். ஆங்கிலேய நாட்டில் பிறந்த *மூடி* தெளிவான ஆங்கிலம் பேசத் தெரியாதவர்! தேவனோ அவரிடம் "உன் கையில் என்ன உள்ளது?" என்று கேட்டு விட்டார். செருப்புத் தொழில் செய்த மூடியோ "என்னிடம் வெறும் செருப்புகள்தான் உள்ளது" என பதில் கூறினார். இதேபோன்ற கேள்வியைத்தான் *வில்லியம்கேரியிடம்* தேவன் ஒருமுறை கேட்டார். செருப்பு தைக்கும் தொழிலைக் கொண்ட அவர், மூடியைப் போலவே "என்னிடம் வெறும் செருப்புகள்தான் உள்ளது" என பதில் கூறினார். அதற்கு ஆண்டவர் "அவைகளை என்னிடத்தில் கொடு" என கட்டளையிட்டார்!

*நம்மிடம் இருப்பது, வெறும் 'செருப்பாய்' இருந்தாலும் அல்லது கம்ப்யூட்டர் பொறியாளர்கள் செய்திடும் 'மைக்கேரா சிப்ஸ்' ஆனாலும், உங்களிடம் இருப்பதை கர்த்தரிடம் கொடுத்துவிட்டால், அதை அவர் பயன்படுத்த மாட்டாரோ? அவ்வாறு தங்களிடம் உள்ளதை முற்றிலும் கொடுத்தவர்களை, தேவன் ஆசீர்வதிப்பது மாத்திரமல்லாமல், அவர்கள் மூலமாய் பல்லாயிரம் ஜனங்களை ஆசீர்வதிப்பார் என்பது, அன்றும்.... இன்றும்.... என்றும் மாறாத உத்தம சத்தியமாகும்!*

*- D.L.மூடி*

## மாசுபடாத ஜீவியம்!

*வயிற்றுக்குப்போன தீட்டு, இருதயம் போகக்கூடாது*

"புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தாது" என இயேசு கூறியதை, அன்று சீஷர்கள் விளங்கிக்கொள்ளவில்லை! (மாற்கு 7:18). இன்றும், அதுபோலவே விளங்கிக்கொள்ளாத கிறிஸ்தவர்கள் அனேகராய் இருக்கிறார்கள். அதன் விளைவுதான், அவர்களின் ஜீவியத்தை மாசில்லாமல் அல்லது தீட்டுப்படுத்தாமல் காத்திட முடியாமல் தவிக்கிறார்கள்!

'போஜனத்தை' முன்வைத்து, தீட்டுப்படாத 'மாசில்லா' வாழ்க்கையை இயேசு நேர்த்தியாய் விளக்கி கூறினார். கையை கழுவாத தினிமித்தம், கையிலிருந்து வரும் 'அழுக்கு' அவனை மாசுபடுத்தாது! அது, அவன் வயிற்றுக்குப்போய், 'ஆசன வழியாய்' நீங்கிப்போகும்! அதுபோலவே, நம் ஜீவியத்திலும் மாசில்லா வாழ்க்கை வாழ்ந்திட முடியும் என்ற மிகப்பெரிய சத்தியத்தை எடுத்துக் கூறினார்! (வச.19).

*நம் ஜீவியத்தில் புறம்பேயிருந்து, உள்ளே வரும் 'யாதொரு அழுக்கையும்' தடுத்து நிறுத்த முடியாது! அது, உங்கள் கணவன் மனைவி உரையாடலில் ஏற்படும் வெறுப்போ, சகோதர சகோதரிகளிடம் ஏற்பட்ட பொறாமையோ, அல்லது யாரோ சிலர் விளைவிக்கும் தீமையான நோக்கங்களோ அல்லது கிறிஸ்துவுக்கு பிரியமில்லாத யாதொரு புறம்பேயிருந்து வரும் தீமைகளோ, நம் எல்லோருடைய வயிற்றுக்குள்ளும் போகிறது உண்மைதான்! ஆனால், கர்த்தரை சார்ந்து பரிசுத்த மாசில்லா ஜீவியத்தை விரும்புகிறவன் "அவைகள்" (தீட்டுகள்) தன் **இருதயத்தில் போய்விடாமல்,** பரிசுத்தாவி பெலன்கொண்டு காத்துக்கொள்வான்! ஆகவே, புறம்பேயிருந்து வந்த அந்த 'தீட்டுகள்' ஆசனவழியாய் **நீங்கிப்போகும்** (Eliminated) அல்லாமல், அவன் இருதயத்திற்குள் போக அனுமதிக்க மாட்டான்! என்ற மாசில்லா வாழ்விற்குரிய **வழியை** இயேசு நமக்கு போதித்துள்ளார்! (வச.19).*

அப்படியில்லையென்றால், நம்மைச்சுற்றி நடைபெறும் எத்தனையோ அன்றாட சூழ்நிலையிலிருந்து உள்ளே வரும் அழுக்கு, நம் இருதயத்திற்குள் சென்று மாசு ஏற்படுத்திவிடும்! அவன் இருதயத்திற்குள், தீட்டாகிய "பொல்லாத சிந்தை.... வன்கண், தூஷணம், பெருமை, மதிகேடு ஆகியவை புறப்பட்டு, அனேகரையும் தீட்டுப்படுத்திவிடும்" (மாற்கு 7:21-23) என்ற எச்சரிக்கையை ஏற்று, மாசில்லா வாழ்க்கையை அனுதினமும் வாழ்வோமாக!

- T.ரத்தினகுமார்

குடும்ப தியான புத்தகத்தால் கோடி மக்களை ஆசீர்வதித்த மிஷனெரி!

# திருமதி. சார்லஸ் கஃவ்மென்



19-ம் நூற்றாண்டின் OMS மிஷன் சொஸைட்டியில் வலிமையான தலைவராய் விளங்கியவர்தான் திருமதி.சார்லஸ் கஃவ்மென். 1870-ம் ஆண்டு அமெரிக்க தேசத்தில் கொலொரோடாவில் பிறந்த இவர், 1889-ம் ஆண்டு திருமணத்திற்குப் பிறகு அந்த மலை தேசத்தை விட்டு தன் கணவரோடு சிக்காக்கோவில் வாழ்ந்தார். மிஷனெரி பாரம் கொண்ட தன் கணவரோடு சேர்ந்து, ஜப்பான் தேசத்திற்கு மிஷனெரி தம்பதிகளாக 1901-ம் ஆண்டு வந்து சேர்ந்தார்கள். வேதாகம பயிற்சி பள்ளி ஆரம்பித்து, பல சுவிசேஷ கூட்டங்கள் நடத்தினார்கள். ஜப்பானிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் சுவிசேஷம் போய் சேர வேண்டும் என்ற தாகத்தோடு ஊழியம் செய்தார்கள். அதன் விளைவாய் சுமார் ஆறு இலட்சம் ஜப்பானியர்களை கிறிஸ்துவின் சீடர்களாக மாற்றினார்கள்.

1918-ம் ஆண்டு அமெரிக்க தேசத்திற்கு திரும்பியவுடன் சார்லஸ் அதிக நோய்வாய்ப்பட்டார். தொடர்ந்த நோய்வாய் படுக்கையில் 1924-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மரித்தார். அந்த நீண்ட 7-வருட கால கண் விழிப்பிலும், துக்கத்திலும் தன் கணவரை பராமரித்த இந்த வருடங்களில்தான் 'பாலைவன நீரோடை' (Streams in the Desert) என்ற புத்தகத்தை திருமதி.சார்லஸ் எழுதினார்கள். துன்பங்களின் மத்தியில், தேவனோடு கொண்ட உறவில் திருமதி.லெட்டி சார்லஸ் கஃவ்மென் இந்த அருமையான தினசரி தியான புத்தகத்தை எழுதினார்கள். இந்த தியான புத்தகத்தின் தலைப்பை ஏசாயா 35:6-ம் வசனத்திலிருந்து கண்டு எடுத்தார்கள்: "அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான், ஊமையன் நாவும் கெம்பீரிக்கும். வனாந்தரத்தில் தண்ணீர்களும், பாலைவனத்திலே ஆறுகளும் பாய்ந்தோடும்". இந்த தியான புத்தகம், பல கோடி மக்களுக்கு பக்தி விருத்தியடைச் செய்யும் என்பதை திருமதி.சார்லஸ் அறிந்திருக்கவில்லை. இந்த புத்தகத்தை முதலாவது 3000 பிரதிகள் மாத்திரமே அச்சடித்தார்கள். ஆனால், அதன் பின்பு இந்த புத்தகம் பல லட்சக்கணக்கில் பல்வேறு மொழியில் பிரசுரிக்கப்பட்டது. பல இலட்சக்கணக்கான வாசகர்கள் இந்த புத்தகத்தின் ஆற்று நீரோடையில் ஒன்றர கலந்து விட்டார்கள். அதுஏனென்றால், அவர்கள் எல்லோரும் கூறிய சாட்சி "எங்கள் சொந்த துன்ப நேரத்தில் தேவனுடைய நித்திய நோக்கத்தையும், அவரது மாறாத அன்பையும், அவரின் புத்திக்கெட்டாத ஞானத்தையும் எங்களுக்குள் பாய்ந்து செல்ல வழிசெய்து விட்டது" என அறிக்கை செய்தார்கள். திருமதி. சார்லஸ் கஃவ்மென் கூறும்போது "நான் நீரோடைகளை எழுதவில்லை! தேவன் எனக்கு நீரோடைகளை தந்தார்!" என கண்ணீருடன் கூறினார். தொடர்ந்து, மிகுந்த ஆசீர்வாதமான, பள்ளத்தாக்கின் ஊற்றுக்கண், மிஷனெரி வீரன், அதுவரை அமைதியாயிருங்கள், போன்ற மிக அருமையான 15-புத்தகங்களை எழுதினார். தனிமையில், தேவனுடைய ஊற்றுக்கண்ணில் வாழ்ந்த இந்த மிஷனெரி சகோதரி 1960-ம் ஆண்டு ஏப்ரல் 17-ம் தேதி கர்த்தருக்குள் தன் பயணத்தை முடித்து வெற்றி சிறந்தார்.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## பரலோக ஆசீர்வாதமே, லோக ஆதாயத்தை புறக்கணிக்கும்!

இங்கிலாந்து தேசத்து பரிசுத்தவான் பில்லிபிரே, தன் வயது முதிர்ந்த விருத்தாப்பிய நாட்களில் தம்முடைய உருளைக்கிழங்கு வயலில் உருளைக் கிழங்குகளை மண் வெட்டியால் மண்ணைத் தோண்டி எடுத்துக் கொண்டிருந்தார். அந்த ஆண்டில் உருளைக்கிழங்கு விளைச்சல் மிகவும் மோசமாயிருந்தது. பல செடிகளை வெட்டிப் பார்த்தும் அவைகளில் வேர்களேயன்றி கிழங்குகள் ஒன்றும் காணப்படவில்லை.

பில்லி மிகவும் துக்கத்துடன் தனக்கு முன்னாலுள்ள வறட்சியான உருளைக் கிழங்கு வயலைப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயம் ஈனப்பிசாசு அவரண்டை வந்தான். "பில்லி, உன் பரலோகத் தந்தை உன்னை உளமார நேசிக்கின்றார் என்று நீ நினைக்கின்றாயா?" என்றான் அவன். "அதில் சந்தேகம் என்ன இருக்கின்றது? அவர் என்னை நேசிப்பதை நான் மனதார அனுபவித்து வருகின்றேனே!" என்றார் பில்லி. "அவர் உன்னை நேசிப்பவரானால் உருளைக்கிழங்கில் நல்ல விளைச்சலை உனக்குக் கொடுத்திருப்பார் அன்றோ?" என்றான் தந்திர பிசாசு.

பிசாசின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பில்லி பிரேயிடம் தெய்வ கோபம் பொங்கி வந்தது. அந்த பிசாசைப் பார்த்து: "பிசாசே, உன்னோடு எனக்கு சில ஆண்டுகாலம் மிகவும் நெருங்கிய பிணைப்பும், நட்பும் இருந்தது. அநேக அப்பாவி ஏழை மனிதர்களைப் போல நானும் உன்னை நேசித்து உனக்குத் தொண்டு செய்தேன். ஆனால் நீ எனக்குக் கைமாறாகத் தந்தது நிர்ப்பந்தமான பூவுலக வீடும், எப்பொழுதும் கலக்கமும் திகிலும் நிறைந்த உள்ளமும், வேதனையில் தள்ளாடும் கவலையும், நரக அக்கினியின் பயங்கர நினைவுகளும் மாத்திரமே!"

ஆனால் பரலோகத்திலுள்ள என் அன்பின் இயேசு இரட்சகருக்கு கடந்த 32 ஆண்டுகள் நான் அவரது அடிமையாக இருக்கின்றேன். அவர் எனக்குச் சந்தோஷமும், சமாதானமும் பொங்கி வழியும் ஒரு பரிசுத்த இருதயத்தையும் தந்திருக்கின்றார். பழமையாய் போகாததும், கறைபடாததுமாகிய இரட்சிப்பின், வெண்வஸ்திரத்தை அவர் எனக்கு உடுத்தியிருக்கின்றார். பரலோகத்தின் ராஜ அந்தஸ்தும் வாக்களித்துள்ளார். ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட பாக்கிய நாளில் அவர் என்னைத் தம்முடைய மகிமையின் மாளிகைக்கு அழைத்துச் சென்று நான் அவரோடு கூட என்றுமுள்ள சதாகாலங்களிலும் அரசாளும் சிலாக்கியத்தையும் தந்தருள்வார்! "அப்பாலே போ, சாத்தானே" என்றார் பில்லி. சாத்தான் தலை கவிழ்ந்து ஓடிப்போனான்!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப **QR** பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**